பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

23 10 2024 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள **Dana** புயல் தீவிர புயலாக வலுவடைந்து ஒடிஷா அருகே கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
2. பிரதமர் திரு நரேந்திர மோடி, சீன அதிபர் திரு **Xi Jinping** –குடன் இன்று பேச்சு நடத்தினார்.
3. சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-ஆவது பிறந்த தின கொண்டாட்டங்கள் இரண்டு ஆண்டுகள் நடத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அறிவித்துள்ளார்.
4. வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி இன்று வேட்புமனு தாக்கல் செய்தார்.
5. நியூசிலாந்து சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Charan Naik** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**<<<<<>>>>>**

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள **Dana** புயல் தொடர்ந்து வலுவடைந்து வருவதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*<u>(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் 40 செகண்ட்ஸ்)</u>*

புயல் கரையை கடக்கும்போது மணிக்கு 110 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, ஒடிஷாவின் **Balasore, Bhadrak, Kendrapara, Jagatsingpur, Puri** மற்றும் **Khorda** மாவட்டங்களில் இன்று மாலை தொடங்கி, 7 முதல் 11 சென்டிமீட்டர் வரை கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Baleswar, Dhenkanal, Khorda,** உட்பட பல்வேறு மாவட்டங்களில் நாளையும், நாளை மறுநாளும் 21 சென்டிமீட்டர் வரை மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Dana** புயல் எச்சரிக்கை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்த புயல் காரணமாக பாதிக்கப்படக்கூடும் என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

14 கடலோர மாவடடங்கள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று தொடங்கி மூன்று நாட்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்கள் மற்றும் மருத்துவர்களின் விடுமுறை ரத்து செய்யப்பட்டு பணிக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பல்வேறு பயணிகள் ரயில் சேவையும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்திய கடலோர காவல்படை நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.

இந்த புயலினால் ஏற்படும் எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு தேவையான தயார் நிலையில் கடலோர காவல்படை வைக்கப்பட்டுள்ளது.

இதேபோல், தேசிய பேரிடர் மீட்புப்படையின் 20 குழுக்கள் ஒடிஷாவிலும், 13 குழுக்கள் மேற்குவங்கத்திலும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஆந்திராவின் விசாகப்பட்டினம் மற்றும் சட்டீஸ்கர், ஜார்கண்ட் மாநிலங்களுக்கும் தேசிய பேரிடர் மீட்புப்படையின் குழுக்கள் செல்வதற்கு ஏதுவாக திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாக அதன் தலைமை இயக்குனர் திரு **Mohsen Shahidi** புதுதில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மத்திய அரசும் நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.

**<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி, சீன அதிபர் திரு **Xi Jinping** –குடன் இன்று பேச்சு நடத்தினார்.

பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக அரசு முறைப்பயணமாக ரஷ்யாவின் **Kazan** சென்றுள்ள பிரதமர், இன்று சீன அதிபருடன் நடத்திய இந்த பேச்சுக்களில் இருதரப்பு உறவுகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எல்லை கண்காணிப்பு தொடர்பான ஒப்பந்தத்திற்கு இரு தலைவர்களும் வரவேற்பு தெரிவித்ததாகவும் திரு விக்ரம் மிஸ்ரி கூறினார்.

**<<<<<>>>>>**

இந்தியாவின் இரும்புமனிதர் என்று போற்றப்படும் சர்தார் வல்லபாய் பட்டேலின் 150–ஆவது பிறந்த தின கொண்டாட்டங்களை இரண்டு ஆண்டுகளுக்கு நடத்துவதென மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அறிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ள அவர், உலகின் துடிப்பான ஜனநாயகத்தை உருவாக்கியதில் முக்கிய பங்கு வகித்தவர் சர்தார் வல்லபாய் பட்டேல் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

ஒற்றுமைக்காக பாடுபட்ட ஒப்பற்ற தலைவரான சர்தார் வல்லபாய் பட்டேலை கௌரவிக்கும் வகையில் இந்த ஆண்டு தொடங்கி, 2026–ஆம் ஆண்டுவரை கொண்டாட்டங்கள் நடைபெறும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

மத்திய அரசின் மலிவு விலை கடலைபருப்பு விற்பனை இரண்டாவது கட்டமாக இன்று தொடங்கியுள்ளதாக உணவு அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், மலிவு விலை கடலைபருப்பு விற்பனை வாகனத்தின் சேவையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

ஒரு கிலோ கடலைபருப்பு 70 ரூபாய்க்கு இதில் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடலைபருப்புக்கான இறக்குமதி கட்டணமும் ரத்து செய்யப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தியாவசியப் பொருட்கள் உட்பட பல்வேறு பொருட்களின் விலை சீராக இருப்பதை உறுதி செய்வதற்காக மத்திய அரசு 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான நிதியம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளதாகவும் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் வரும் 27-ஆம் தேதி ஒலிபரப்பாகிறது.

இதில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

1 8 0 0 – 1 1 – 7 8 0 0 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்புகொண்டு வரும் வெள்ளிக்கிழமை வரை கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

**mygov** மற்றும் **Namo App** கைபேசி செயலி வாயிலாகவும் பொதுமக்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

விளையாட்டுத்துறையில் சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்யும் நோக்கில், தேசிய விளையாட்டு நிர்வாக வரைவு மசோதா உருவாக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இந்த வரைவு மசோதா தொடர்பாக இன்று புதுதில்லியில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் தேவையை பூர்த்தி செய்வதற்கான அம்சங்கள் இந்த மசோதாவில் இடம்பெற்றிருப்பதாக அவர் கூறினார்.

விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கும் இளையோருக்கு உரிய வாய்ப்புகள் கிடைப்பதை இந்த மசோதா உறுதி செய்யும் என்றும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

பேரிடர் மேலாண்மை தொடர்பான கொள்கைகள் இளையோரை கருத்தில்கொண்டு உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பேரிடர் மேலாண்மை அமைப்புகள் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் இயற்கை பேரிடர் தொடர்பான தகவல்கள் சமூக வலைதளங்கள் மூலம் பகிரப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பொதுமக்களிடம் தகவல்களை விரைவாக கொண்டு சேர்ப்பதில் சமூக வலைதளங்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு நித்யானந்த ராய் தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

மும்பை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதிகளாக ஐந்து பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, **Nivedita Prakash Mehta,** திரு **Prafulla Surendra Kumar Khubalkar,** திரு **Ashwin Damodar Bhobe,** திரு **Rohit Wasudeo Joshi,** திரு **Advait Mahendra Sethna** ஆகியோர் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதவியேற்கும் நாளில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்கு அவர்கள் இப்பொறுப்பை வகிப்பார்கள் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**<<<<<>>>>>**

கேரள மாநிலம் வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி இன்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி, அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு கே சி வேணுகோபால் மற்றும் மூத்த நிர்வாகிகளுடன் ஊர்வலமாக சென்று திருமதி பிரியங்கா காந்தி வேட்புமனுவை தாக்கல் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மக்களவைத் தேர்தலின்போது வயநாடு மற்றும் ரெய்பரேலி தொகுதியில் வெற்றிபெற்ற திரு ராகுல்காந்தி, வயநாடு தொகுதியில் ராஜினாமா செய்ததையடுத்து இந்த தேர்தல் நடைபெறுகிறது.

**<<<<<>>>>>**

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

நியூசிலாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Charan Naik** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.
ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 17-21, 21-17, 21-13 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Leung Ka Yau** –வை வென்றார்.

------------------

17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை தகுதிச்சுற்று கால்பந்து போட்டியில் இந்தியா 13-0 என்ற கோல் கணக்கில் புரூனே-யை வென்றது.
தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியில் விஷால் ஹாட்ரிக் கோல் அடித்தார்.

---------------

புதுதில்லியில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஹாக்கிப்போட்டியில் ஜெர்மனி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது போட்டி நாளை நடைபெறுகிறது.

-----------------

மலேசியாவில் நடைபெற்றுவரும் ஜோஹர் கோப்பைக்கான ஜுனியர் ஹாக்கிப்போட்டியில், ஆஸ்திரேலியா இன்று 4-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

------------------

வளரும் அணிகளுக்கான ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா "ஏ" – ஓமன் இடையேயான ஆட்டம் ஓமனில் தற்போது நடைபெற்று வருகிறது.

இப்போட்டியில் டாஸ் வென்ற ஓமன் அணி முதலில் பேட் செய்து வருகிறது.

**<<<<<END>>>>>**